



# TNPSC GROUP - II & IIA Prelims - Answer Explanation

## பொதுத் தமிழ்

## அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்

**55-37/30-18/50-18/25-09/44-12**

**1. விடை: B**

**விளக்கம்:**

“ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு” - கொன்றைவேந்தன்.

**பொருள்:**

ஒருவனுக்குச் சிறந்த அழகைத் தருவது தளரா முயற்சி. தளர்ச்சியில்லா முயற்சி இல்லாதவனிடம் இருக்கும் செல்வம் நிலைக்காது. அது குறைந்து கொண்டே போகும். முயற்சி உடையவனிடம் இருக்கும் செல்வமே மேலும் கூடும்.

**2. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.

**பொருள்:**

பெரியாரைப் போற்றித் தமக்குச் சுற்றத்தாராக்கிக் கொள்ளுதல், பெறத்தக்க அரிய பேறுகள் எல்லாவற்றிலும் அருமையானதாகும்.

**3. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

**பொருள்:**

மணலில் உள்ள கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல் மக்களின் கற்ற கல்வியின் அளவிற்கு அறிவு ஊறும்

**4. விடை: C**

**விளக்கம்:**

நல்லாதனார் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்.

5. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு

**பொருள்:** கற்றவனுக்குத் தன் நாடும் ஊரும் போல வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும் ஆகையால் ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?

6. **விடை: C**

**விளக்கம்:**

- நாலடியாரைத் தொகுத்தவர் பதுமனார்.
- நாலடியாரை முப்பாலாகப் பகுத்தவர் தருமர்.

7. **விடை: B**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** அவையஞ்சாமை

பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்து
அஞ்சும் அவன்கற்ற நூல்

**பொருள்:** அவையினிடத்தில் அஞ்சுகின்றவன் கற்ற நூல், பகைவரின் போர்க்களத்தில் அஞ்சுகின்ற பேடியின் கையில் உள்ள கூர்மையான வாள் போன்றது.

8. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

**பொருள்:** கண்ணோட்டம் என்று சொல்லப்படுகின்ற மிகச் சிறந்த அழகு இருக்கும் காரணத்தால் தான், இந்த உலகம் அழியாமல் இருக்கின்றது

9. **விடை: C**

**விளக்கம்:**

“நாடி நமரென்று நன்கு புரந்தாரைக்
கேடு பிறரோடு சூழ்தல் கிளர்மணி
நீடுகல் வெற்ப நினைப்பின்றித் தாமிருந்த
கோடு குறைத்து விடல்” - பழமொழி நானூறு.

**பொருள்:** தமக்கு உதவியவர்களுக்கு அவரின் பகைவரோடு சேர்ந்து தீங்கிழைப்பது, ஒருவன் உணர்வின்றித் தான் தங்கியிருந்த கிளையின் அடியை வெட்டி வீழ்த்தி உயிர்விடுதலைப் போன்றதாகும்.

**10. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத்து அற்று

**பொருள்:**

ஒரு செயலைச் செய்யும் போது அச் செயலால் மற்றொரு செயலையும் செய்து முடித்துக் கொள்ளல், ஒரு யானையால் மற்றொரு யானையைப் பிடித்தலைப் போன்றது.

**11. விடை: D**

**12. விடை: B**

**விளக்கம்:**

“அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவுஅல்லர் அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு” - மூதுரை

**பொருள்:**

குளத்தில் கொட்டி என்னும் நீர்க் கொடியும் ஆம்பல் என்னும் கொடியும் நெய்தல் கொடியும் நிறைந்து இருக்கும். அதே குளத்தில் உள்ள மீன்களை உண்ணும் நோக்கத்துடன் பறவைகளும் இருக்கும். குளத்தில் நீர் நிறைந்து இருக்கும் போது அங்கே தங்கி இருக்கும் பறவைகள், நீர் வற்றிவிட்டால் வேறு குளத்திற்குப் பறந்து போய் விடும். ஆனால் கொட்டி, ஆம்பல், நெய்தல் முதலிய நீர்க் கொடிகள் நீர்வற்றி விட்டாலும் அந்தக் குளத்திலேயே கிடந்து வாடும்.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**13. விடை: C**

**விளக்கம்:**

- வண்மை - ஈகை, கொடை
- பிணி - நோய்
- மெய் - உடம்பு
- மேதை - அறிவு நுட்பம்
- காதல் - அன்பு

**14. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு ஒழுகப் பெறின்

**பொருள்:**

அந்தந்தப் பகுதிதோறும் முறையோடு பொருந்தி ஒழுகப்பெற்றால், நடுவுநிலைமை என்று கூறப்படும் அறம் நன்மையாகும்.

**15. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

**பொருள்:** கல்லாதவனிடம் சேர்ந்துள்ள செல்வமானது, கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையைவிட மிகத்துன்பம் செய்வதாகும்.

**16. விடை: D**

**விளக்கம்:**

**திரிகடுகம்**

இல்லார்க்கொன் றீயும் உடைமையும்,இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும் - எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.

**பொருள்:** வறியவர்க்குப் பொருளை அளித்தல், இவ்வுலகத்துப் பொருள்களின் நிலையாமையை அறிந்து நல்வழி நிற்றல், எவ்வுயிரையும் துன்புறுத்தாத நிலையில் வாழ்தல் என்னும் இம்மூன்றும் அறவழியில் நடக்கும் மக்களுக்கே என்றும் உண்டு.

**17. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை

**பொருள்:** யாரிடத்திலும் (குற்றம் இன்னதென்று) ஆராய்ந்து, கண்ணோட்டம் செய்யாமல் நடுவுநிலைமைப் பொருந்தி (செய்யத்தக்கதை) ஆராய்ந்து செய்வதே நீதிமுறையாகும்.

**18. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

**பொருள்:** அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்ற உடம்பாகும்: அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல்போர்த்த வெற்றுடம்பே ஆகும்

**19. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

**பொருள்:** கண்ணுடையவர் என்று கூறப்படுபவர் கற்றவரே, கல்லாதவர் முகத்தில் இரண்டு புண் உடையவர் ஆவார்.

**20. விடை: D**

**விளக்கம்:**

**நாலடியார்**

உள்ளத்தால் நள்ளாது உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தான் நட்டார் கழிகேண்மை - தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட!
மனத்துக்கண் மாசாய் விடும்.

**பொருள்:**

தெளிந்த தன்மையுடன் கூடிய அருவிநீர் சேற்றை அலசி ஒதுக்கும் மலைநாட்டு மன்னனே! மனப்பூர்வமாக நட்புக் கொள்ளாமல் (இவர் உண்மையாக அன்பு கொள்பவர் என நம்புமாறு) உறுதியான செயல்களைச் செய்து வஞ்சனையாக உறவு கொள்பவருடைய மிக்க நட்பு மனத்தில் பெருங் குற்றமுடையதாக இருக்கும்.

**21. விடை: A**

**விளக்கம்:**

- ஜியு போப் 7வது, 100வது பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.
- நான்மணிக்கடிகை கடவுள் வாழ்த்துடன் மொத்தம் 104 பாடல்களைக் கொண்டுள்ளது.

**22. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று.

**பொருள்:**

நுட்பமானதாய் மாட்சியுடையதாய் ஆராய வல்லவான அறிவு இல்லாதவனுடைய எழுச்சியான அழகு மண்ணால் சிறப்பாகப் புனையப்பட்ட பாவை போன்றது.

**23. விடை: B**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** செங்கோன்மை

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி

**பொருள்:**

உலகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் மழையை நம்பி வாழ்கின்றன, அதுபோல் குடிமக்கள் எல்லாம் அரசனுடைய செங்கோலை நோக்கி வாழ்கின்றனர்.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**24. விடை: D**

**விளக்கம்:**

'சேரிடம் அறிந்து சேர்' - ஆத்திசூடி

**பாடலின் பொருள்:** நல்லவர்களின் சேர்க்கையால் நன்மையும், தீயவர்களின் சேர்க்கையால் தீமையும் உண்டாவதாகக் கூறப்படுகிறது.

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளஞ் சுடும்.

**பொருள்:** கேடு வரும் காலத்தில் கைவிட்டு ஒதுங்குகின்றவரின் நட்பு, எமன் கொல்லும் காலத்தில் நினைத்தாலும் நினைத்த உள்ளத்தை வருத்தும்.

**25. விடை: D**

**விளக்கம்:**

நல்தா மரைக் கயத்தில் நல்அன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்; கற்புஇலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம் - மூதுரை

**பொருள்:**

- அன்னம் தாமரை பூக்கும் குளத்துக்குப் போய்ச் சேர்வது போலக் கற்றாரைக் கற்றார் விரும்பி ஒன்றுசேர்வர்.
- பிணத்தை எரிக்காமலும் புதைக்காமலும் போடும் முதுகாட்டிற்கு விரும்பிச் சென்று காக்கை பிணத்தை உண்ணும்.
- அதுபோலக் கல்வி அறிவு இல்லாத மூர்க்கரை மூர்க்கரே விரும்பிச் சென்று அவரோடு சேர்ந்துகொள்வர்.

**26. விடை: D**

**27. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**பொருள்:** நல்லொழுக்கம் இன்பமான நல்வாழ்க்கைக்குக் காரணமாக இருக்கும்; தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தைக் கொடுக்கும்.

**28. விடை: D**

**விளக்கம்:**

**உவமையணி**

ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**அதிகாரம்:** பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

**பொருள்:** தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல், தம்மை இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்.

**29. விடை: D**

**30. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.

**பொருள்:**

பகைவராக உள்ளவரைப் பொருந்துமாறு சேர்த்துக் கொள்ளல், நண்பர்க்கு உதவியானவற்றைச் செய்தலைவிட விரைந்து செய்யத்தக்கதாகும்.

**31. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

**பொருள்:**

சொற்களின் தூய்மைத் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக்களத்தின் வகையினை அறிந்து, வல்லவரின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்லமாட்டார்.

**32. விடை: D**

**விளக்கம்:**

**பழமொழி நானூறு**

"தந்தீமை யில்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை யென்றே உணர்பதாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
ஒருவர் பொறையிருவர் நட்பு."

**பொருள்:**

நட்புச் செய்தவர்களுக்குத் தம்மால் ஒரு சிறு தீமை கூட செய்யாத நல்ல பண்புடையவர்கள், தமக்கு நண்பர்கள் செய்யும் தீமையையும் தமக்கு வந்த துன்பமாக எண்ணாமல், 'இது என்னுடைய தீவினைப் பயனால் வந்தது' என்று உணர்ந்து, அதனைப் பொறுத்துக் கொள்வார்கள்.

**33. விடை: C**

**விளக்கம்:**

**இன்னா நாற்பது**

"ஊனைத் தின்று ஊனைப்பெருக்கல் முன்னின்னா"

**பொருள்:**

ஒரு உயிரைக் கொன்று, அந்த ஊனைத் தின்று தன் உடலைப் பெருக்குவது மிகவும் தீமையான செயல். இது அறத்திற்கு எதிரானது மற்றும் பிற உயிர்களைத் துன்புறுத்துவதால், இந்தச் செயல் செய்யத் தகாதது (இன்னா) என்று கபிலர் கூறுகிறார்

**34. விடை: B**

**விளக்கம்:**

அணி விளக்கம்: ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**அதிகாரம்:** பண்புடைமை

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று.

**பொருள்:**

பண்பு இல்லாதவன் பெற்ற பெரிய செல்வம், வைத்த கலத்தின் தீமையால் நல்ல பால் தன் சுவை முதலியன கெட்டாற் போன்றதாகும்.

**35. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

**பொருள்:**

நட்புச் செய்தபிறகு நட்பை உடையவர்க்கு அதிலிருந்து விடுதலை இல்லை, ஆகையால் ஆராயாமல் நட்புச் செய்வது போல் கெடுதியானது வேறு இல்லை.

**36. விடை: D**

**37. விடை: D**

**விளக்கம்:**

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" - கொன்றைவேந்தன்.

**பொருள்:**

தாயும் தந்தையுமே நாம் முதலில் அறியும், கண்ணெதிரே காணும் தெய்வம்.

**38. விடை: B**

**விளக்கம்:**

"நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் - இவையெட்டும்
சொல்லிய ஆசார வித்து" - ஆசாரக்கோவை

**பொருள்:**

பிறர் செய்த உதவியை மறவாதிருத்தல்: பிறர் செய்யும் தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்; இனிய சொற்களைப் பேசுதல்: எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல்; கல்வி அறிவு பெறுதல்; எல்லோரையும் சமமாகப் பேணுதல்: அறிவுடையவராய் இருத்தல்: நற்பண்புகள் உடையவரோடு நட்புக் கொள்ளுதல் ஆகிய எட்டும் நல்லொழுக்கத்தை விதைக்கும் விதைகள் ஆகும்.

**39. விடை: A**

**விளக்கம்:**

அறநெறிகளைத் தொகுத்துக் கூறுவதால் இந்நூல் அறநெறிச்சாரம் எனப் பெயர்பெற்றது.

**40. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உரமொருவற்கு உள்ள வெறுக்கை அஃ தில்லார்
மரம்மக்க ளாதலே வேறு.

**பொருள்:** ஒருவனுக்கு வலிமையானது ஊக்க மிகுதியே, அவ்வூக்கம் இல்லாதவர் மரங்களே, (வடிவால்) மக்களைப் போல் இருத்தலே வேறுபாடு.

**41. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

**பொருள்:** வீட்டில் இருந்து பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும் பொருட்டே ஆகும்

**42. விடை: D**

**விளக்கம்:**

“உள்ளத்தான் நள்ளாது உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தான் நட்டால் சுழிகேண்மை - தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனத்துக்கண் மாசாய் விடும்” - நாலடியார்.

**பொருள்:**

மனம் ஒன்றி நட்புக் கொள்ளாமல், காரியம் சாதிக்க வேண்டும் என்பதற்காக கள்ளத்தனமாக நட்புக் கொள்ளும் கழிந்து போகும் நட்பானது, தெளிந்த நீர் செதும்பு நிலத்தில் நின்று அலைமோதும் அழகிய குன்றத்தின் தலைவனே! மனத்தில் தோன்றிய மாசாகக் கருதப்படும்.

**43. விடை: A**

**விளக்கம்:**

- “குறள் வகுப்பறையில் மட்டுமல்லாமல் உங்கள் இல்லங்களில் மட்டுமல்லாமல் உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” - பேரறிஞர் அண்ணா
- “ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் நிலை நாட்ட வேண்டும் என்றால் அதற்கு வள்ளுவம் தான் பயன்பட வேண்டும்” - முத்தமிழறிஞர் கலைஞர்

**44. விடை: D**

45. **விடை: D**

**விளக்கம்:**

“உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்” - இப்பாடல் வரிகள் ஔவையாரின் நல்வழி என்ற நூலில் அமைந்துள்ளது.

46. **விடை: C**

**விளக்கம்:**

- மடவார் - பெண்கள், மடவார் × ஆண்கள்
- உணர்வு - நல்லெண்ணம், உணர்வு × தீய எண்ணம்
- தகைசால் - பண்பில் சிறந்த
- புகழ்சால் - புகழைத் தரும்

47. **விடை: C**

**விளக்கம்:**

- நீதி நூல்களுள் திருக்குறள், நாலடியாருக்கு அடுத்துப் புகழ் பெற்ற நூல் பழமொழி நானூறு.
- பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் வரலாற்றை மிகுதியாகத் தரும் நூல் பழமொழி நானூறு.

48. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

**பொருள்:** செல்வநிலையில் உள்ளோரின் வறுமை என்பது விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்: அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.

49. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

**பொருள்:** ஒருவருடைய வாழ்கைக்கு அறத்தை விட நன்மையானதும் இல்லை ; அறத்தைப் போற்றாமல் மறப்பதை விடக்கொடியதும் இல்லை.

50. **விடை: C**

51. **விடை: D**

52. **விடை: D**

53. **விடை: C**

**விளக்கம்:**

**வினையாலணையும் பெயர்**

- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும், மூன்று காலங்களிலும் வரும்.

54. **விடை: C**

**விளக்கம்:**

"கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்று அங்கு எதிர்கொள்வர்; இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்றுஎடுத்த
தாய்வேண்டாள்; செல்லாது அவன்வாயின் சொல்" - நல்வழி

**பொருள்:** கையிலே பொருள் வைத்திருப்பவன் ஆயின், அவன் கல்வி அறிவு இல்லாதவன் ஆனாலும், அவன் வரும்போது அவனிடம் எல்லாரும் சென்று எதிர்கொண்டு வரவேற்பர். கையில் பொருள் இல்லாத ஏழையாக வாழ்ந்தால், அவனை மனைவியும் விரும்பமாட்டாள்; பெற்றெடுத்த தாயும் விரும்பமாட்டாள். அவன் வாயிலிருந்து வரும் சொற்கள் செல்லாக் காசுகள் ஆகிவிடும்.

55. **விடை: C**

**விளக்கம்:**

- கூடலூர்கிழார் ஐந்தாம் நூற்றாண்டை சேர்ந்தவர்.
- கூடலூர்கிழார் முதுமொழிக்காஞ்சி, ஐங்குறு நூறு ஆகிய நூல்களைத் தொகுத்துள்ளார்.
- கூடலூர்கிழார் மதுரை மாவட்டத்தில் பிறந்தார்.

56. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல்.

**பொருள்:** தீமை பயக்காமல் நன்மையே தருவதானாலும் நடுவு நிலைமை தவறி உண்டாகும் ஆக்கத்தை அப்போதே கைவிட வேண்டும்.

57. **விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.

**பொருள்:** மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர் தம்மை விட்டு நீங்கும்படியாகப் புறம் கூறி நண்பரையும் பிரித்து விடுவர்.

**58. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

நல்லாற்றாள் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை.

**பொருள்:** நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும்; பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும்.

**59. விடை: A**

**விளக்கம்:**

வணங்கி வழியொழுகி மாண்டார்சொல் கொண்டு
நுணங்கிநூல் நோக்கி நுழையா - இணங்கிய
பால்நோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூல்நோக்கி வாழ்வான் நுனித்து - கணிமேதாவியார்

**பொருள்:** பிறர்க்குப் பணிந்தும், நல்வழியில் நடந்தும், மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும், நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும், அவை நவிலும்வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

**60. விடை: A**

**விளக்கம்:** காரியாசானும் கணிமேதாவியரும் ஒரு சாலை மாணாக்கர்.

**61. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.

**பொருள்:** யான் வறியவன் என்னும் துன்பச் சொல்லை ஒருவன் உரைப்பதற்கு முன் அவனுக்குக் கொடுக்கும் தன்மை, நல்ல குடி பிறப்பு உடையவனிடம் உண்டு.

**62. விடை: C**

**63. விடை: D**

**64. விடை: D**

**விளக்கம்:**

"ஆற்றுப் பெருக்குஅற்று அடிசுடும் அந்நாளும்
ஊற்றுப் பெருக்கால் உலகுஊட்டும்; ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
'இல்லை' என மாட்டார் இசைந்து" - நல்வழி

**பொருள்:** வழி வழியாகப் பிறருக்குப் பொருளை வழங்கும் நல்ல குடியில் பிறந்தவர்களை வள்ளல் குடியினர்' என்று சிறப்பித்துக் கூறுவார்கள். அத்தகைய வள்ளல் குடியில் பிறந்தவர்கள் வறுமை நிலையை அடைந்தாலும், தங்களைத் தேடி வந்தவர்களுக்குப் பொருள் இல்லை' என்று சொல்ல மாட்டார்கள். அவ்வாறு சொல்வதற்கு அவர்களது உள்ளம் விரும்பாது.

**65. விடை: B**

**66. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

**பொருள்:** அன்புக்கும் அடைத்து வைக்கும் தாழ் உண்டோ? அன்புடையவரின் சிறு கண்ணீரே (உள்ளே இருக்கும் அன்பைப்) பலரும் அறிய வெளிப்படுத்திவிடும்

**67. விடை: B**

**விளக்கம்:**

**பழமொழி நானூறு**

“சிறிய பொருள் கொடுத்துச் செய்த வினையால்
பெரிய பொருள்கருது வாரே - விரிபூ
விராஅம் புனலூர வேண்டயிரை விட்டு
வராஅல் வாங்கு பவர்”

**பொருள்:**

விரிந்த மலர்கள் கலந்த நீர்வளம் மிக்க ஊரின் தலைவனே! (வறியோர்க்கு) இம்மையிலேயே தம்மால் இயன்ற சிறிய அளவிலான உதவியைச் செய்து, அந்த நல்வினையால் மறுமையில் பெரும் பயனை (செல்வத்தை) அடைய விரும்புபவர்கள், சிறிய அயிரை மீனைத் தூண்டிலில் இரையாகப் போட்டு, பெரிய வரால் மீனைப் பிடிப்பவர்களைப் போன்றவர்கள் ஆவர்.

**68. விடை: D**

**விளக்கம்:**

- கபிலர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்.
- இன்னா நாற்பது நூலின் ஆசிரியர் கபிலர்.
- கபிலர் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்.

**69. விடை: B**

**விளக்கம்:** திரிகடுகம் சுக்கு, மிளகு, திப்பிலியால் ஆன மருந்துப் பெயர் ஆகும்.

**70. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

**பொருள்:**

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

**71. விடை: B**

**72. விடை: D**

**73. விடை: C**

**விளக்கம்:**

மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை அறிவென் என்றல் பேதைமை -
தன்னைத் துணித்தானும் தூங்காது அறம்செய்க
கூற்றம் அணித்தாய் வருதலும் உண்டு. - அறநெறிச்சாரம்

**பாடலின் பொருள்:**

மின்னலைப் போன்ற நிலையற்ற இளமை எப்போதும் இருக்கும் என மகிழ்ந்து, பிறகு அறம் (நல்ல காரியங்கள்) செய்யலாம் என்று நினைப்பது அறியாமை. மரணம் (கூற்றம்) எந்த நேரமும் வரலாம் என்பதால், காலம் தாழ்த்தாமல் இளமையிலேயே அறம் செய்ய வேண்டும்.

**74. விடை: D**

**75. விடை: A**

**விளக்கம்:**

**அணி விளக்கம்:**

ஒரு பாடலில் உவமையும் உவமேயமும் வந்து உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.

**அதிகாரம்:** செங்கோன்மை

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட்டு அதனொடு நேர்

**பொருள்:**

கொடியவர் சிலரைக் கொலைத்தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைச் களைவதற்கு நிகரான செயலாகும்

**76. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

**பொருள்:**

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை அமைந்திருத்தல் ஆகிய இவ்விரண்டும் பண்பு உடையவராக வாழும் நல்வழியாகும்.

**77. விடை: D**

**விளக்கம்:**

“விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல்லால் உண்ணாரே என்றும்
ஒழுக்கம் பிழையா தவர்” - ஆசாரக்கோவை.

**பொருள்:**

ஒழுக்கம் தவறாத சான்றோர்கள், உணவு உண்ணும் போது, விருந்தினர்கள், வீட்டில் உள்ள வயதான முதியவர்கள், பசு, பறவைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகள், குழந்தைகள் ஆகியோருக்கு உணவளித்த பின்னரே தாங்கள் உண்பார்கள்.

**78. விடை: C**

**விளக்கம்:**

“இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்” - முனைப்பாடியார்

**பொருள்:**

இனிய சொல்லையே விளைநிலமாகக் கொள்ளவேண்டும். அதில் ஈகை என்னும் பண்பை விதையாக விதைக்க வேண்டும். வன்சொல் என்னும் களையை நீக்க வேண்டும். உண்மை பேசுதல் என்னும் எருவினை இடவேண்டும். அன்பாகிய நீரைப் பாய்ச்ச வேண்டும். அப்போதுதான் அறமாகிய கதிரைப் பயனாகப் பெற முடியும். இளம் வயதிலேயே இச்செயல்களைச் செய்ய வேண்டும்.

**79. விடை: B**

**விளக்கம்:**

“நல்லார் நயவர் இருப்ப நயம் இலாக்
கல்லார்க் கொன்றாகிய காரணம் - தொல்லை
வினைப்பயன் அல்லது வேல்நெடுங் கண்ணாய்
நினைப்ப வருவதொன் றில்” - நாலடியார்

**பாடலின் பொருள்:**

வேற்படை போன்ற நீண்டகண்களையுடைய மாதே! உயர்ந்த அறிவு செயல்களுடையாரும் இனியருமான மேலோர் உலகத்தில் வளமின்றியிருக்க, அவ்வினிமையுங் கல்வியறிவும் இல்லாக் கீழோர்க்கு ஒரு செல்வநிலை உண்டான காரணம் பழைய நல்வினையின் பயனேயல்லது வேறு ஆய்ந்து துணிதற்குரிய காரணம் இல்லை.

**பாடலின் கருத்து:** நற்குண நற்செயல்கள் இல்லார் செல்வராயிருப்பினும், சான்றோர் அதனை முன்வினைப் பயனென்று கருதி மதியாது செல்வர்.

**அதிகாரம்:** ஊழ்

நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வம் செயற்கு

**பொருள்:** செல்வத்தை ஈட்டும் முயற்சிக்கு ஊழ்வகையால் நல்லவை எல்லாம் தீயவை ஆதலும் உண்டு, தீயவை நல்லவை ஆதலும் உண்டு.

**80. விடை: C**

**விளக்கம்:**

கணிமேதாவியார் சமண சமயத்திற்கே உரிய கொல்லாமை முதலான உயரிய அறக்கருத்துகளை ஏலாதியில் வலியுறுத்துகிறார்.

**81. விடை: A**

**82. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு.

**பொருள்:** செல்வநிலையில் உள்ளோரின் வறுமை என்பது, விருந்தோம்புதலைப் போற்றாத அறியாமையாகும்; அஃது அறிவிலிகளிடம் உள்ளதாகும்.

**83. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.

**பொருள்:** பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் பேசுதல் ஆகிய நான்கும் இல்லாமல் வாழ்வதே அறம் ஆகும்.

**84. விடை: B**

**விளக்கம்:**

**சிறுபஞ்சமூலம்**

கண்வனப்புக் கண்ணோட்டம், கால்வனப்புச் செல்லாமை,
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல், கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு.

**பொருள்:** கண்ணுக்கு அழகு இரக்கம் கொள்ளல்; காலுக்கு அழகு பிறரிடம் இரந்து செல்லாமை; ஆராய்ச்சிக்கு அழகு தமது முடிவைத் துணிந்துரைத்தல்; இசைக்கு அழகு அதனைக் கேட்போர் நன்றெனப் புகழ்தல்; அரசனுக்கு அழகு, குடிமக்களை வருத்தாமல் காப்பவன் என்று, பிறர் அவனைப் புகழ்ந்து உரைத்தல்.

**85. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்.

**பொருள்:** கல்லாதவர் உயிரோடிருக்கின்றனர் என்று சொல்லப்படும் அளவினரே அல்லாமல் ஒன்றும் விளையாத களர் நிலத்திற்கு ஒப்பாவர்.

**86. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

**பொருள்:**

குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப்பொருந்தி உலகம் நிலை பெறும்.

**87. விடை: B**

**விளக்கம்:**

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின் - போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லான்!" - திருவள்ளுவ மாலை
திருவள்ளுவ மாலையில் நத்தத்தனார் பாடிய பாடல்

**88. விடை: C**

**விளக்கம்:**

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்-தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி - மூதுரை

**பொருள்:**

காட்டிலே மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழிதன்னையும் அந்த மயிலாகப் பாவனை செய்துகொண்டு, தன் பொலிவு இல்லாத சிறகுகளை விரித்துஆடினால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்கிறது கல்வி அறிவு இல்லாத ஒருவன் கற்றறிந்தவன் பாட்டைக் கேட்டுப் பழகிக்கொண்டு பாடுவது.

**89. விடை: B**

**விளக்கம்:**

"இடர்தீர்த்தல் எள்ளாமை கீழ்இனம் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் - நடைதீர்த்தல்
கண்டவர் காமுறும்சொல் காணில் கல்வியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும்" - ஏலாதி

**பொருள்:**

கல்வியின் பயன் நல்லொழுக்கத்தையும் நல்ல நெறிகளையும் உடையவராகச் செய்தலேயாகும். ஒருவர் மேற்கூறிய பண்புகளைப் பெற்றிருப்பாரேயாயின் அவர் கல்வியின் பயனை அடைந்ததாகவே கருதலாம். ஆனால், அத்தகையோர்க்குச் சான்றோர்களின் அறநூல்களும் தேவையற்றுப் போய்விடும்.

**90. விடை: C**

**விளக்கம்:**

**நாலடியார்**

வாழ்க்கையின் எல்லா இன்னல்களுக்கும் காரணமான அறியாமையாகிய மயக்கத்தைத் தீர்ப்பது கல்வி. இக்கருத்தை விளக்கும் நாலடியார் பாடல்,

"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து" - நாலடியார்

**91. விடை: A**

**விளக்கம்:** விளம்பி நாகனார் வைணவ சமயத்தைச் சார்ந்தவர்.

**92. விடை: D**

**93. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

**பொருள்:**

கண்ணோட்டதிற்க்கு உரிய கண்ணோடு பொருந்தி இருந்தும் கண்ணோட்டம் இல்லாதவர் (கண் இருந்தும் காணாத) மரத்தினைப் போன்றவர்.

**94. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.

**பொருள்:**

அன்பு பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்: அஃது எல்லாரிடத்தும் நட்பு என்றுசொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

**95. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

**பொருள்:**

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர்:ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்கும் அதுவே துணையாக நிற்கின்றது

**96. விடை: B**

**விளக்கம்:**

**நாலடியார்**

பெரியவர் கேண்மை, பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும் - வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

**பொருள்:**

பெரியவர் நட்பு நாள்தோறும் வளரும்.
பிறைநிலா வளர்வது போல் வளரும்.
சிறியவர் நட்பு தேயும்.
வானத்தில் ஊரும் முழுநிலா தேய்வது போல நாள்தோறும் தேயும்.

**97. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.

**பொருள்:**

ஒழுக்கத்தை வருந்தியும் போற்றிக் காக்க வேண்டும்; பலவற்றையும் ஆராய்ந்து போற்றித் தெளிந்தாலும், அந்த ஒழுக்கமே வாழ்க்கையில் துணையாக விளங்கும்.

VETRII A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**98. விடை: C**

**விளக்கம்:**

- இன்மை - வறுமை
- நிறை - சால்பு
- இகழ்வார் - இழிவுபடுத்துவோர்
- மடவார் - அறிவிலார்
- ஒறுத்தார் - தண்டித்தவர்

**99. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்
உடையது உடையரோ மற்று.

**பொருள்:**

ஒருவர் பெற்றிருக்கின்றார் என்று சொல்லத்தக்க சிறப்புடையது ஊக்கமாகும், ஊக்கம் இல்லாதவர் வேறு எதைப் பெற்றிருந்தாலும் அதை உடையவர் ஆவரோ?

**100. விடை: B**

**விளக்கம்:**

**நான்மணிக்கடிகை**

கள்வம் என்பார்க்கும் துயில்இல்லை காதலி மாட்டு
உள்ளம் வைப்பார்க்கும் துயில்இல்லை ஒண்பொருள்
செய்வம் என்பார்க்கும் துயில்இல்லை அப்பொருள்
காப்பார்க்கும் இல்லை துயில்

**பொருள்:**

கள்வர்களுக்கும் தூக்கம் இல்லை. தலைவியை விரும்பும் தலைமகனுக்கும் தூக்கம் இல்லை. செல்வத்தை ஈட்டுபவனுக்கும் தூக்கம் இல்லை. அச்செல்வத்தைத் திருடு போகாது காப்பவனுக்கும் தூக்கம் இல்லை. எனவே நிலையில்லாப் பொருள்களின்கண் நாட்டம் கொள்ளாமல் மெய்ப்பொருளைத் தேடியடைவதே மனிதவாழ்வின் நோக்கமாகும்.

**101. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

கல்லா தவரின் கடையென்ப கற்றறிந்தும்
நல்லா ரவையஞ்சு வார்.

**பொருள்:**

நூல்களைக் கற்றிந்த போதிலும் நல்ல அறிஞரின் அவைக்கு அஞ்சுகின்றவர், கல்லாதவரை விடக் கடைப்பட்டவர் என்று கூறுவர்.

**102. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

**பொருள்:**

கண்ணோட்டத்தினால் உலகியல் நடைபெறுகின்றது, கண்ணோட்டம் இல்லாதவர் உயிரோடு இருத்தல் நிலத்திற்குச் சுமையே தவிர வேறு பயனில்லை.

**103. விடை: D**

**விளக்கம்:**

**நாலடியார்**

"பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னர்
மரீஇப் பின்னைப் பிரிவு"

**பொருள்:**

உயிரைப் பறிக்கும் பாம்போடு பழகிப் பின் பிரிவது எவ்வளவு ஆபத்தோ, அவ்வளவு தீங்கானது நல்லவர் என்று பழகிப் பின் அவர்களோடு நட்பை முறித்துக் கொள்வது. எனவே, பலருடன் பழகினாலும், தகுதியானவரை ஆராய்ந்து நட்புக் கொள்ள வேண்டும்.

**104. விடை: A**

**விளக்கம்:**

**நான்மணிக்கடிகை**

கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும், மான் வயிற்று
ஒள் அரிதாரம் பிறக்கும், பெருங் கடலுள்
பல் விளைய முத்தம் பிறக்கும், அறிவார் யார்,
நல்லாள் பிறக்கும் குடி.

**பொருள்:**

கள்ளியின் வயிற்றில் மணம் தரும் அகில் பிறக்கும். மானின் வயிற்றில் சிறந்த அரிதாரம் பிறக்கும். பெருங்கடலுள் உள்ள சிப்பியில் முத்து பிறக்கும். ஆனால், நல்லவர் பிறக்கும் குடியை யார் அறிவார்? (நல்லவரா? கெட்டவரா? என்பதைப் பிறப்பு தீர்மானிப்பதில்லை என்பதை, 'நல்லாள் பிறக்கும் குடி' என்னும் தொடர் விளக்குகிறது).

**105. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஒழுக்கமுடைமை

ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

**பொருள்:**

ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப்பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப்பிறப்பின் தன்மையாகி விடும்.

**106. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

**பொருள்:**

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

**107. விடை: B**

**விளக்கம்:**

**படித்தவனிடமே பொறுப்பை ஒப்புவிக்கவும்**

உற்றான் உறாஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்
கற்றானை நோக்கியே கைவிடுக்க-கற்றான்
கிழவனுரை கேட்கும் கேளான் எனினும்
இழவன்று எருதுண்ட உப்பு.

**பொருள்:**

கற்றவனிடமே காரியத்தை ஒப்புவிக்க வேண்டும் என்பது கருத்து. எருது உப்பைத் தின்றாலும், அதிக உரமுடையதாக உரியவனுக்கு நன்றாக உழைப்பது போலக் கற்றவனும் உழைப்பான் என்பதாம். 'இழவன்று எருதுண்ட உப்பு' என்பது பழமொழி.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**108. விடை: B**

**விளக்கம்:**

**திரிகடுகம்**

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும் நிறைஒழுக்கம்
தேற்றாதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

**பொருள்:**

அறம் தவறாது செயல்படும் ஆற்றல் இல்லாதவன் பெற்ற தலைமை, ஒழுக்கம் இல்லாதவன் மேற்கொண்ட தவம், மேலான ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காதவன் பெற்ற அழகு ஆகிய இம்மூன்றும் புதரில் விதைத்த விதைபோன்று பயனற்றவையே.

**109. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்.

**பொருள்:** விருந்தினரை முன்னே போற்றி உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதையும் விதைக்க வேண்டுமோ?

**110. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்
புறத்த புகழும் இல.

**பொருள்:** அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை: புகழும் இல்லாதவை.

**111. விடை: C**

**விளக்கம்:**

- மருந்துப் பெயர்களில் முதலாவதாக அமைந்த நூல் - திரிகடுகம்
- மருந்துப் பெயர்களில் இரண்டாவதாக அமைந்த நூல் - சிறுபஞ்சமூலம்
- மருந்துப் பெயர்களில் மூன்றாவதாக அமைந்த நூல் - ஏலாதி

**112. விடை: A**

**விளக்கம்:**

ஏலாதி நூல் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் உட்பட 81 வெண்பாக்களைக் கொண்டுள்ளது.

**113. விடை: D**

**விளக்கம்:**

முற்காலத்துப் பெருகிய செல்வத்தைப் பின்னர்க் குறைவுபடாமல் காத்தலே சிறந்தது.

**114. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி

**பொருள்:**

முன்னே தான் சமமாக இருந்து, பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து, ஒரு பக்கமாக சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும்.

**115. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின்.

**பொருள்:**

தன் மனம் தான் அறிந்த குற்றத்தில் தங்குமானால் வானத்தைப் போல் உயர்ந்துள்ள தவக்கோலம் ஒருவனுக்கு என்ன பயன் செய்யும்.

**116. விடை: D**

**விளக்கம்:**

**சிறுபஞ்சமூலம்**

"பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போர்த்த
அருள்போகா வாரறமென் றைந்தும் இருள்தீரக்
கூறப்படும் குணத்தான் கூர்வேல்வல் வேந்தனால்
தேறப்படும் குணத்தி னான்"

**பொருள்:**

பொருள், இன்பம், இடுக்கண் வந்த காலத்து அஞ்சாமை, பிறிதோர் உயிரின் துன்பங்கண்டு இரங்குதல், நிலையான அறம் ஆகிய ஐந்தும் உடையவன் நல்ல அரசனாகச் செயலாற்றுவதற்குரிய தகுதியுடையவனாகிறான்.

**117. விடை: B**

**விளக்கம்:**

- இளமையைக் காட்டிலும் - நோயற்ற வாழ்வே சிறந்தது.
- அழகுடையவராக இருப்பதினும் - நாணமுடையவராக இருப்பதே சிறந்தது.

**118. விடை: D**

**விளக்கம்:**

- "நீதித் திருக்குறளை நெஞ்சாரத் தம் வாழ்வில்
  ஓதித்தொழுது எழுக ஓர்ந்து" - கவிமணி
- "வாழ்க்கைக்கான அன்பு நெறியைக் கூறும் உயர்ந்த நூல்" - ஆல்பர்ட் ஸ்வைட்சர்

**119. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

**பொருள்:**

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.

**120. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்

**பொருள்:**

தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே உலகம் கண்ணாகக் கொண்டு நடத்தலால், மன்னவனும் அத்தகையாரைக் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும்

**121. விடை: C**

**விளக்கம்:**

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர். - வாக்குண்டாம்

**பொருள்:**

- நல்லவர் ஒருவர்க்குச் செய்த உதவி கல்லில் பொளித்து வைத்த எழுத்தைப் போல அவர் நெஞ்சத்தில் நிலைத்திருக்கும்.
- நல்லவர் அல்லாத, நெஞ்சில் ஈரம் இல்லாதவர்க்குச் செய்த உதவி தண்ணீரில் எழுப்படும் எழுத்தினைப் போல அப்போதே மறைந்துவிடும்.

**122. விடை: A**

**விளக்கம்:**

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை - கொன்றைவேந்தன்.

**பொருள்:**

நல்லவர் என்று எண்ணித் தான் ஒருவரோடு பழக்கத்தை உண்டாக்கிக் கொள்கிறோம். நல்லவர் என்று நம்பி நாம் ஏற்றுக் கொண்ட ஒருவரிடம் சில தவறுகள் காணப்பட்டாலும் நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

**123. விடை: C**

**விளக்கம்:**

“தாவின்றி எப்பொருளுங் கண்டுணர்ந்து தாமரைப்
பூவின்மேற் சென்றான் புகழடியை - நாவின்
துதித்தீண் டறநெறிச் சாரத்தைத் தோன்ற
விரிப்பன் சுருக்காய் விரைந்து” - அறநெறிச்சாரம்

**பொருள்:**

குற்றமின்றி எல்லாப் பொருள்களையும் உணர்ந்து தாமரை மலர் மீது வீற்றிருக்கும் இறைவனின்/பிரம்மனின் திருவடிகளை நாவால் துதித்து, அறநெறிச்சாரம் நூலைச் சுருக்கமாக விரிப்பேன் என்று தொடங்குகிறது.

**124. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.

**பொருள்:** வேண்டிய பொருள், ஏற்றகருவி, தக்க காலம், மேற்கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும் குழப்பம் தீர எண்ணிச் செய்ய வேண்டும்.

**125. விடை: C**

**விளக்கம்:**

- திருக்குறள் மெய்ப்பொருளுரை என்பது பெருஞ்சித்திரனார் இயற்றிய நூல்
- வாயுறை வாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது
- ‘தமிழ்மாதின் இனிய உயிர்நிலை’ எனப் போற்றப்படும் நூல் - திருக்குறள்

**126. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.

**பொருள்:** கற்றவரின் முன் தாம் கற்றவைகளை அவருடைய மனதில் பதியுமாறு சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரிலும் கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார்.

**127. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அன்புடைமை

அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

**பொருள்:** அகத்தில் அன்பு இல்லாமல் வாழும் உயிர் வாழக்கை வளமற்ற பாலைநிலத்தில் பட்டமரம் தளிர்த்தாற் போன்றது.

**128. விடை: A**

**விளக்கம்:**

கொன்றைவேந்தனில் ஓர் எழுத்திற்கு ஒரு பாடலாக மொத்தம் 91 பாடல்கள் உள்ளன.

**129. விடை: A**

**விளக்கம்:**

**பாடல்:**

“செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இருநிதியம்-வையத்து
அறும்பாவம் என்னவறிந்து அன்றிடார்க்கு இன்று
வெறும்பானை பொங்குமோ மேல்” - நல்வழி

**பொருள்:**

முன்பு செய்த தீய வினைகள் (பாவங்கள்) நமக்கு வறுமையாக நிழலாட, அதற்காகக் கடவுளைத் திட்டுவதால் பெரிய செல்வம் வந்து சேர்ந்துவிடாது. அரிசி போடாத வெறும் பானையை அடுப்பில் வைத்து எவ்வளவு எரித்தாலும் அது பொங்காது. அதுபோல, ஈய வேண்டிய காலத்தில் (செல்வம் இருந்தபோது) பிறருக்குக் கொடுத்து உதவாமல், பாவம் சேர்த்துவிட்டு, இப்போது செல்வம் இல்லை என்று கடவுளை நொந்து கொள்வதில் பயன் இல்லை.

**130. விடை: C**

**131. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்வி

உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

**பொருள்:**

மகிழும் படியாகக் கூடிப்பழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று ) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

**132. விடை: A**

**விளக்கம்:**

“காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார் - சாலவும்
ஆழப் படும் ஊண் அமைத்தார் இமையவரால்
வீழப் படுவார் விரைந்து” - ஏலாதி

**பொருள்:**

கை கால் இழந்தவர், பார்வையற்றவர், ஊமையர். தமக்குத் துணையாக எவருமே இல்லாதவர், நூலறிவு இல்லாதவர் முதலியவர்களுக்கு வயிறார உணவளித்தவர்கள் தேவர்களால் விரும்பிப் போற்றப்படுவார்கள் என்பது இச்செய்யுளின் கருத்து.

**133. விடை: D**

**134. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்

**பொருள்:**

வஞ்சமனம் உடையவனது பொய்யொழுக்கத்தை அவனுடைய உடம்பில் கலந்து நிற்கும் ஐந்து பூதங்களும் கண்டு தம்முள் சிரிக்கும்

**135. விடை: B**

**விளக்கம்:**

"பகல் தெற்கு நோக்கார் இராவடக்கு நோக்கார்
பகற்பொய்யார் தீயுனுள் நீர்" - ஆசாரக்கோவை

**பொருள்:**

- பகல் தெற்கு நோக்கார்: பகல் பொழுதில் மலசலம் கழிக்கும்போது தெற்கு நோக்கி அமரக்கூடாது.
- இராவடக்கு நோக்கார்: இரவு பொழுதில் வடக்கு நோக்கி அமர்ந்து மலசலம் கழிக்கக்கூடாது.
- பகற்பொய்யார் தீயுனுள் நீர்: பகல் நேரத்தில் எரியும் நெருப்பில் நீரை ஊற்றி அதை அணைக்கக்கூடாது

**136. விடை: D**

**விளக்கம்:**

"கேட்பாரை நாடிக் கிளக்கப் படும்பொருட்கண்
வேட்கை அறிந்துரைப்பார் வித்தகர் - வேட்கையால்
வண்டு வழிபடரும் வாட்கண்ணாய்! தோற்பன
கொண்டு புகாஅ ரவை" - பழமொழி நானூறு

**பாடலின் பொருள்:**

சொல்வதைக் கவனமுடன் கேட்கக் கூடியவரிடம் சென்று, தான் சொல்வதைக் கேட்பதிலும் அவருக்கு விருப்பம் இருக்குமா எனத் தெரிந்து கொண்டு சொல்பவரே அறிவாளி. விருப்பத்துடன் வண்டு (மலரென நினைத்து) மொய்க்க வரும் ஒளிபொருந்திய மலர்களை ஒத்த கண்களைக் கொண்ட பெண்ணே! சபை ஏறாது தனது கருத்து என்று தெரியுமாயின் அவையினரிடம் கொண்டு செல்லத் தேவையில்லை.

**அதிகாரம்:** சொல்வன்மை

வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றார் கோள்

**பொருள்:**

பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லின் பிறர் சொல்லும் போது அச் சொல்லின் பயனை ஆராய்ந்து கொள்ளுதல் மாசற்ற சிறப்புடையவரின் கொள்கையாகும்.

**137. விடை: B**

**விளக்கம்:**

"திருக்குறள் புதைபொருள்" என்பது கி.ஆ.பெ. விசுவநாதம் எழுதிய திருக்குறளின் ஆழ்ந்த கருத்துக்களை விளக்கும் ஒரு நூலாகும். இந்நூலின் பெயர் திருக்குறளின் மறைபொருளான ஆழமான கருத்துக்களை வெளிக்கொணர்வதைக் குறிக்கிறது. திருக்குறள் புதைபொருள் என்ற நூல் சாகித்திய அகாடமி விருது பெறவில்லை.

- திருக்குறள் நீதி இலக்கியம் - க. த. திருநாவுக்கரசு (1974)
- வாழும் வள்ளுவம் - வ. செ. குழந்தைசாமி (1988).
- வணக்கம் வள்ளுவ - ஈரோடு தமிழன்பன் (2004)

**138. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

கல்லாதான் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

**பொருள்:**

கல்லாதவனுடைய அறிவுடைய ஒருக்கால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**139. விடை: D**

**140. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு.

**பொருள்:**

நீதி முறைப்படி செங்கோல் செலுத்தும் அரசனுடைய நாட்டில் பருவ மழையும் நிறைந்த விளைவும் ஒருசேர ஏற்படுவனவாகும்.

**141. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண்பு இல்லா தவர்.

**பொருள்:**

மக்களுக்கு உரிய பண்பு இல்லாதவர் அரம் போல் கூர்மையான அறிவுடையவரானாலும், ஓரறிவுயிராகிய மரத்தைப் போன்றவரே ஆவர்.

**142. விடை: D**

**143. விடை: D**

**விளக்கம்:**

- நான்மணிக்கடிகை - விளம்பிநாகனார்
- முதுமொழிக்காஞ்சி - மதுரை கூடலூர் கிழார்
- ஆசாரக்கோவை - பெருவாயின் முள்ளியார்

**144. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு.

**பொருள்:**

ஒருவனுடைய குணத்தையும், குடிப்பிறப்பையும் குற்றத்தையும் குறையாத இனத்தாரின் இயல்பையும் அறிந்து அவனேடு நட்புக் கொள்ள வேண்டும்.

**145. விடை: C**

**விளக்கம்:**

- பிரெஞ்சு - ஏரியல்
- தெலுங்கு - வைத்யநாத பிள்ளை
- இந்தி - பி. டி ஜெயின்
- வடமொழி - அப்பா தீட்சிதர்
- ஜெர்மன் - கிரௌல்

**146. விடை: B**

**விளக்கம்:**

முப்பத்தி நான்கு அதிகாரங்களில் நானூறு பாடல்களைக் கொண்டுள்ளது.

**147. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.

**பொருள்:**

மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்றவன், அவனுடைய பழிகள் பலவற்றிலும் நோகத்தக்கவை ஆராய்ந்து கூறிப் பிறரால் பழிக்கப்படுவான்.

**148. விடை: B**

**விளக்கம்:**

- பெருவாயின் முள்ளியார் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்.
- பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் வன்கயத்தூர்.

**149. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.

**பொருள்:**

பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர், அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயம் அற்றவரே அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.

**150. விடை: D**

**விளக்கம்:**

**திரிகடுகம்**

உண்பொழுது நீராடி உண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் - தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉயம் என்பார் தொழில்.

**பொருள்:**

நீராடிய பின் உண்ணுதல், பெரும்பயன் கிடைத்தாலும் பொய்சாட்சி சொல்லாமல் இருத்தல், உடல்வாடித் தளர்ந்தபோதும் அறிவு ஒழுக்கங்களில் குன்றாது இருத்தல் ஆகிய இம்மூன்றும் மனம், மொழி, மெய்களால் தூய்மை உடையவரின் செய்கைகளாம்.

**151. விடை: C**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

**பொருள்:**

நீர்ப்பூக்களின் தாளின் நீளம் அவை நின்ற நீரின் அளவினவாகும், மக்களின் ஊக்கத்தின் அளவினதாகும் வாழ்க்கையின் உயர்வு.

**152. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** சிற்றினம் சேராமை

குறள்: நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

**பொருள்:**

நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை; தீய இனத்தைவிடத் துன்பத்தை தரும் பகையும் இல்லை.

**153. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஊக்கமுடைமை

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.

**பொருள்:** எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

**154. விடை: C**

**விளக்கம்:**

- ‘ஆசாரம்’ என்றால் ஒழுக்கம் என்று பொருள்.
- ஆசாரக்கோவை நூறு வெண்பாக்களைக் கொண்டது.

**155. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** விருந்தோம்பல்

வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

**பொருள்:** தன்னை நோக்கி வரும் விருந்தினரை நாள்தோறும் போற்றுகின்றவனுடைய வாழ்க்கை, துன்பத்தால் வருந்திக் கெட்டுப் போவதில்லை.

**156. விடை: C**

**விளக்கம்:**

- ஓதலில் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை.
- கற்றாரை வழிபடுதல் கற்றலின் சிறந்தது.

**157. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

**பொருள்:** உள்ளத்தில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும். மற்றவை எல்லாம் வெறும் ஆரவாரமே.

**158. விடை: C**

**விளக்கம்:**

**கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே**

“சீர்த்தகு மன்னர் சிறந்ததனைத்தும் கெட்டாலும்
நேர்த்துரைத் தெள்ளார் நிலைநோக்கிச் - சீர்த்த
கிளையின்றிப் போஒய்த் தனித்தாயக் கண்ணும்
இளைதென்று பாம்பிகழ்வார் இல்”

**பொருள்:** அரச குடிப்பிறப்பின் உயர்வு பிற கேடுகள் வந்த காலத்திலும் ஒருவரை விட்டு மாறாது; அவரை எள்ளற்கு யாரும் துணியார் என்பது கருத்து. 'இளைதென்று பாம்பி கழ்வார் இல்' என்பது பழமொழி.

**159. விடை: C**

**160. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

**பொருள்:**

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது

**161. விடை: D**

**162. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** ஈகை

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.

**பொருள்:**

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறக்குக் கொடுப்பதே சிறந்தது.

**163. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

இடிக்குந் துணையாரை ஆள்வரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

**பொருள்:**

கடிந்து அறிவுரை கூறவல்ல பெரியாரின் துணைக் கொண்டு நடப்பவரைக் கெடுக்கும் ஆற்றல் உள்ளவர் எவர் இருக்கின்றனர்?

**164. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல்.

**பொருள்:**

மனத்தில் பற்றுக்களைத் துறக்காமல் துறந்தவரைப் போல் வஞ்சனைச் செய்து வாழ்கின்றவரைப் போல் இரக்கமற்றவர் எவரும் இல்லை.

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**165. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்.

**பொருள்:**

கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் அமைதியாக இருக்கப் பெற்றால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவரே ஆவார்.

**166. விடை: C**

**167. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** செங்கோன்மை

குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்.

**பொருள்:**

குடிகளைப் பிறர் வருந்தாமல் காத்து, தானும் வருந்தாமல் காப்பாற்றி, அவர்களுடைய குற்றங்களைத் தக்க தண்டனையால் ஒழித்தல், அரசனுடைய தொழில் பழி அன்று

**168. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

உறுப்பொத்தல் மக்களொப்பு அன்றால் வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.

**பொருள்:**

உடம்பால் ஒத்திருத்தல் மக்களோடு ஒப்புமை அன்று, பொருந்தத்தக்கப் பண்பால் ஒத்திருத்தலே கொள்ளத்தக்க ஒப்புமையாகும்.

**169. விடை: A**

**விளக்கம்:**

“வெந்தீக்காண் வெண்ணெய் மெழுகுநீர்சேர் மண்உப்பு
அந்த மகற்சார்ந்த தந்தையென்று - ஐந்தினுள்
ஒன்றுபோல் உள்நெகிழ்ந்து ஈயிற் சிறிதெனினும்
குன்றுபோல் கூடும் பயன்” - சிறுபஞ்சமூலம்.

**பொருள்:**

நெருப்பைக் கண்ட வெண்ணெய், மெழுகு, நீர் சேர்ந்த மண், உப்பு, தன் அழகிய மகனைத் தழுவிய தந்தை என்று சொல்லப்பட்ட ஐந்தனுள் ஒன்றுபோல் இரவலரைக் கண்டால் உள்ளம் நெகிழ்ந்து ஈயவேண்டும். அவ்வாறு ஈயும் பொருள் சிறிதாயினும் அதனால் வரும் பயன் குன்று போலப் பெரிதாய்க் கூடும் என்று ஈகைச் சிறப்பு பேசப்படுகிறது.

**170. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு.

**பொருள்:** நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழும் பெரியோரின் நல்லப் பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

**171. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்.

**பொருள்:** கேடு வந்த போதும் ஒருவகை நன்மை உண்டு, அக் கேடு ஒருவனுடைய நண்பரின் இயல்புகளை நீட்டிஅளந்து பார்ப்பதொரு கோலாகும்.

**172. விடை: B**

**விளக்கம்:**

- கூற்றம் - எமன்
- கோடு - கொம்பு
- வலம் - வெற்றி

**173. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல்.

**பொருள்:** ஒருவனுக்கு ஊதியம் என்று சொல்லப்படுவது, அறிவில்லாதவறுடன் செய்து கொண்ட நட்பிலிருந்து நீங்கி அவரைக் கைவிடுதலாகும்.

**174. விடை: B**

**விளக்கம்:**

“கல்லானே ஆனாலும் கைப்பொருள்ஒன்று உண்டாயின்
எல்லாரும் சென்றுஅங்கு எதிர்கொள்வர்: இல்லானை
இல்லாளும் வேண்டாள்:மற்று ஈன்றுஎடுத்த
தாய்வேண்டாள்: செல்லாது அவன்வாயின் சொல்” - நல்வழி

**பொருள்:**

கல்வி அறிவு உடையவர்கள் அனைவராலும் மதிக்கப்படுவர். கல்வி அறிவு இல்லாதவர்கள் அவ்வாறு மதிக்கப்படுவதில்லை. ஆனால், கல்வி அறிவு இல்லாதவனுக்குச் செல்வம் இருந்தால் அவனையும் எல்லோரும் சென்று போற்றிப் புகழ்வார்கள்.

செல்வம் இல்லாதவனை அவனது மனைவி கூட விரும்பமாட்டாள். அவனைப் பெற்ற தாயும் விரும்பமாட்டாள். அவன் சொல்லும் சொல்லை யாரும் பெரிதாகக் கருதி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று செல்வத்தின் உயர்வை ஔவையார் பாடியுள்ளார்.

**175. விடை: C**

**விளக்கம்:**

**எடுத்துக்காட்டு உவமையணி**

எடுத்துக்காட்டு உவமையணி என்பது உவமையும் உவமேயமும் தனித்தனித் தொடர்களாக வந்து உவம உருபு மறைந்து வருவது.

**அதிகாரம்:** பெரியாரைத் துணைக்கோடல்

முதலிலார்க்கு ஊதிய மில்லை மதலையாம்
சார்பிலார்க் கில்லை நிலை.

**பொருள்:**

முதல் இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் இல்லை, அதுபோல் தம்மைத் தாங்கிக் காப்பாற்றும் துணை இல்லாதவர்க்கு நிலைபேறு இல்லை.

**176. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது.

**பொருள்:**

ஆராய்ந்து எண்ணுவதற்கு எல்லை, துணிவு கொள்வதே ஆகும், அவ்வாறு கொண்ட துணிவு காலந் தாழ்த்து நிற்பது குற்றமாகும்.

**177. விடை: B**

**விளக்கம்:**

- நாலடியார் பாண்டி நாட்டுச் சமணமுனிவர்களால் இயற்றப்பட்டது.
- நாலடியார் நூலில் மொத்தம் 40 அதிகாரங்களும், 12 இயல்களும் உள்ளன.

**178. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

**பொருள்:**

உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் வேண்டா.

**179. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கல்லாமை

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்

**பொருள்:**

அறிவு நிரம்புவதற்குக் காரணமானக் நூல்களைக் கற்காமல் கற்றவரிடம் சென்று பேசதல், சூதாடும் அரங்கு இழைக்காமல் வட்டுக்காயை உருட்டிஆடினார் போன்றது

**180. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** வினைசெயல் வகை

ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.

**பொருள்:**

இயலுமிடத்தில் எல்லாம் செயலைச் செய்து முடித்தல் நல்லது, இயலாவில்லையானால் பயன்படும் இடம் நோக்கியாவது செய்ய வேண்டும்.

**181. விடை: C**

**182. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அவையஞ்சாமை

வாளொடென் வன்கண்ணர் அல்லார்க்கு நூலொடென்
நுண்ணவை அஞ்சு பவர்க்கு.

**பொருள்:**

அஞ்சாத வீரர் அல்லாத மற்றவர்க்கு வாளோடு என்ன தொடர்பு உண்டு? நுண்ணறிவுடையவரின் அவைக்கு அஞ்சுகின்றவர்க்கு நூலோடு என்ன தொடர்பு உண்டு?

**183. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கண்ணோட்டம்

உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.

**பொருள்:**

தக்க அளவிற்குக் கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்தில் உள்ளவை போல் தோன்றுதல் அல்லாமல் வேறு என்ன பயன் செய்யும்?

**184. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.

**பொருள்:**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவன் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்டு பயிரை பசு மேய்ந்தாற் போன்றது

**185. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்நோக்காச் சொல்.

**பொருள்:**

எதிரே நின்று கண்ணோட்டம் இல்லாமல் கடுமையாகச் சொன்னாலும் சொல்லலாம்; நேரில் இல்லாதபோது பின் விளைவை ஆராயாத சொல்லைச் சொல்லக்கூடாது.

**186. விடை: B**

**விளக்கம்:**

உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா
உடன்பிறந்தே கொல்லும் வியாதி - உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்
அம்மருந்து போல்வாரு முண்டு – மூதுரை

**பொருள்:**

உடன் பிறந்தவர் மட்டுமே சுற்றத்தார் என்று நினைத்துக்கொண்டு இருக்க வேண்டியது இல்லை. சர்க்கரை-நோய் போன்ற சில வியாதிகள் நாம் பிறக்கும்போதே நம்முடன் சேர்ந்தே பிறந்து நம்மைக் கொல்கின்றன. நம்முடன் பிறக்காமல், பெரிய மலையில் எங்கோ பிறந்து வளர்ந்த மூலிகை, இடையிலே நம்மை வந்து தாக்கும் பிணியைப் போக்குகின்றன. இந்த மருந்து போன்றவர்களும் நம்முடன் இருக்கிறார்கள்.

**187. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.

**பொருள்:**

அறியாமையாகிய இருள் பொருந்திய துன்ப உலகில் இருந்து வாழும் வாழ்க்கை, அருள் பொருந்திய நெஞ்சம் உடையவர்களுக்கு இல்லை.

**188. விடை: C**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நடுவுநிலைமை

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின்.

**பொருள்:**

உள்ளத்தில் கோணுதல் இல்லாத தன்மையை உறுதியாகப் பெற்றால், சொல்லிலும் கோணுதல் இல்லாதிருத்தல் நடுவுநிலைமையாம்.

**189. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** அருளுடைமை

அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி.

**பொருள்:**

அருளுடையவராக வாழ்கின்றவர்களுக்குத் துன்பம் இல்லை, காற்று இயங்குகின்ற வளம் பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்குச் சான்று ஆவர்.

**190. விடை: B**

**விளக்கம்:**

“பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேர் உலகில்
உற்றார்,உகந்தார் என வேண்டார், மற்றோர்
இரணம் கொடுத்தால் இடுவர். இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்” - நல்வழி

**பொருள்:**

பெற்ற தாயும் தந்தையும், உடன்பிறந்தவர்களும் தன் நாட்டைச் சேர்ந்தவர்களும், உறவினரும், வேண்டிய நண்பர்களும் கெஞ்சிக் கேட்டாலும் வள்ளல் குணம் இல்லாதவர்கள் சிறிது பொருளும் கொடுக்க மாட்டார்கள். ஆனால், தொடர்பே இல்லாதவர்கள் மிரட்டித் துன்புறுத்திக் கேட்டால் அவர்களுக்குக் கொடுத்து விடுவார்கள் என்று ஈகைக் குணம் இல்லாதவர்களின் இழி குணத்தை நல்வழி கூறுகிறது.

**191. விடை: C**

**192. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** பண்புடைமை

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

**பொருள்:**

ஒருவனை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும், பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்லப் பண்புகள் உள்ளன.

**193. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.

**பொருள்:**

உயர்ந்த குடியில் பிறந்து, தன்னிடத்தில் வருகின்றப் பழிக்கு நாணுகின்றவனைப் பொருள் கொடுத்தாவது நட்பு கொள்ளவேண்டும்.

**194. விடை: D**

**விளக்கம்:**

இல்லறம் அல்லது நல்லறம் அன்று - கொன்றைவேந்தன்

**பொருள்:**

இல்வாழ்வில் உள்ள ஒருவன் மற்ற நிலையில் உள்ள மூன்று தரத்தாருக்கும் உரிய துணை ஆவான். இயல்பு நெறியான பிரமச்சரியம் அல்லது மாணாக்கர் நிலை வானப்பிரஸ்தம் என்னும் தவநிலை சந்நியாசம் என்னும் துறவு நிலை ஆக மூன்று நிலையில் உள்ளவர்களுக்கும் நல்ல துணையாக விளங்குபவன்.

**195. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** கூடா ஒழுக்கம்

தவமறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

**பொருள்:**

தவக்கோலத்தில் மறைந்து கொண்டு தவம் அல்லாத தீயச்செயல்களைச் செய்தல், புதரில் மறைந்து கொண்டு வேடன் பறவைகளை வலைவீசிப் பிடித்தலைப் போன்றது.

**196. விடை: B**

**விளக்கம்:**

**அதிகாரம்:** நட்பு ஆராய்தல்

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.

**பொருள்:**

ஊக்கம் குறைவதற்குக் காரணமான செயல்களை எண்ணாமலிருக்க வேண்டும், அதுபோல் துன்பம் வந்த போது கைவிடுகின்றவரின் நட்பைக் கொள்ளாதிருக்க வேண்டும்.

**197. விடை: A**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்
புறங்கூறா னென்றல் இனிது

**பொருள்:**

ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்று சொல்லப்படுதல் நல்லது.

VETRI I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**198. விடை: B**

**விளக்கம்:**

- அல்லல் - துன்பம்
- மல்லல் - வளப்பம்
- தகைமை - மதிப்பு
- கேண்மை - நட்பு

**199. விடை: C**

**விளக்கம்:**

“பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும்இவை
நாலும் கலந்துஉனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா” - நல்வழி

**பொருள்:**

பெருமை மிகுந்த யானை முகத்தைக் கொண்ட விநாயகக் கடவுளே! நான் உனக்கு இனிய பாலையும் தெளிந்த தேனையும் வெல்லப் பாகினையும் பருப்பு வகைகளையும் கலந்து படைக்கின்றேன். நீ எனக்கு இயல், இசை, நாடகம் என்னும் மூன்று தமிழையும் தருவாயாக! என்று ஔவையார் வேண்டுகிறார்.

**200. விடை: D**

**விளக்கம்:**

**அதிகாரம்:** புறங்கூறாமை

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.

**பொருள்:**

புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர் வாழ்தலை விட, அவ்வாறு செய்யாமல் வறுமையுற்று இறந்து விடுதல், அறநூல்கள் சொல்லும் ஆக்கத்தைத் தரும்.